**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**
**சட்டக்கற்கைகள் திணைக்களம்**
**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 6**
**இறுதிப்பரீட்சை – 2020/2021 ( திறந்த புத்தகம் / நிகழ்நிலை)**
**தீங்கியல் சட்டம் - LLU6814 / LWU4326**
**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

---

**திகதி: 16 செப்டெம்பர் 2021** **நேரம்: மு..ப 9.30 – மு..ப 12.30**

---

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

கருத்துத் திருட்டு மற்றும் உமது விடைகளை எழுதுவதற்கு உதவிகளைப் பெறுதல் என்பன பரீட்சை குற்றமாகக் கருதப்படும்.

**நான்கு வினாக்களிற்கு மட்டும் விடையளிக்க. எல்லா வினாக்களும் 25 புள்ளிகளிற்கு உரியன.**

1. சமன் என்பவன் தெற்கு பல்கலைக்கழகத்தின் மாணவன் ஆவான். பல்கலைக்கழக விதிகளின் பிரகாரம் சகல மாணவர்களும் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து மாலை 7 மணிக்கு நீங்க வேண்டும்.

   சமன் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் அவன் வாடகைக்கு அமர்த்தியிருந்த ஒரு அறையில் வசித்தான். அவனது வீட்டு உரிமையாளர் அதிக மின்சாரம் விரயமாகும் என்பதால் , அவனது அறையில் அவனை மின் உபகரணங்கள் பாவனை செய்ய அனுமதித்திருக்கவில்லை. ஒரு நாள் சமன் , அவனது மடிக்கணணியில் ஒப்படை ஒன்றை நிறைவு செய்ய வேண்டி இருந்ததால் , அவன் மாணவர்களிற்கான சிற்றுண்டிச்சாலைக்கு வெளியே 9 மணி வரை அமர்ந்திருந்தான். வளாகத்தை சோதனையிட்ட நிகால் எனும் பாதுகாப்பு ஊழியர் , சமனைக் கண்டார். அவர்கள் இருவரும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்பதுடன் , இருவரது குடும்பத்தவர்களும் சுமூகமான உறவைக் கொண்டிருக்கவும் இல்லை.

   விதிகளை மீறி வளாகத்தில் காலம் தாமதித்தும் இருந்தமைக்காக , சமன் , நிகாலை திட்டினான். சமன் , நிகாலை அவனுடைய வேலையை கவனிக்குமாறு கூறினான். சமனை நிலத்தில் தள்ளிய நிகால் "இது உன்னுடைய குடும்பத்திற்கு ஒரு நல்ல பாடத்தைக் கற்பிக்கும்" என்றுரைத்து, அவனை உதைக்க ஆரம்பித்தான். சமன் சத்தமிடுவதை கேட்டு , தினேஷ் எனும் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி சம்பவத்தை அறிய அவ்விடத்திற்கு வந்தார்.

அவரிடம் சமன் உதவி கோரிய போது , தினேஷ் "உன்னை போன்ற மாணவர்கள் ஒழுக்கப் படுத்தப்பட வேண்டும். நீ எப்போதும் விதிகளை மீறுகிறாய்" என்றுரைத்தார். நிகால் , சமனைத் தாக்குவதில் இருந்து தினேஷ் நிறுத்தவில்லை. நிகாலின் தாக்குதல் காரணமாக சமன் வெட்டுக் காயங்களிற்கு உள்ளாகினான்.

தினேஷ் பல்கலைக்கழக ஊழியர் ஆவார். பாதுகாப்பு கடமைகளிற்கு உதவி அளிப்பதற்காக பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ள ரக்ன சேவா பிரைவட் லிமிடட் எனும் தனியார் பாதுகாப்பு நிறுவனத்தால் நிகால் பணியமர்த்தப்பட்டுள்ளான்.

சமன் நட்டயீட்டுக்காக வழக்கொன்றை தாக்கல் செய்ய விரும்புகிறான். அறிவுறுத்துக.

2. *Anns v Merton London Borough Council (1978) A.C. 728* வழக்கில் நீதிபதி வில்பர்போர்ஸ் (Lord Wilberforce) இற்கமைய கவனக் கடப்பாடு ஒன்றை நிறுவுவதற்கு , நிலைநாட்டப்பட வேண்டிய இரு நிலைகள் காணப்படுகின்றன.

"முதலாவதாக வினவ வேண்டியதானது , தவறிழைத்ததாகக் கூறப்படுபவருக்கும் ஊறால் பாதிப்புற்றுள்ள நபரிற்கும் இடையே போதுமான ஒரு அண்மைத் தொடர்பு (relationship of proximity or neighbourhood) காணப்படுகின்றதா என்பதாகும். அதாவது தவறிழைத்தவரின் நியாயாமான சிந்தனையும் , அவனால் ஏற்படுத்தப்படும் கவனயீனமும் ஊறு ஏற்படுத்தப்பபட்டவருக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் - இத்தகு சந்தர்ப்பத்தில் முகத்தோற்றமளவில் கவனக் கடப்பாடு எழலாம்.

"இரண்டாவதாக, முதலாவது வினாவானது சாதகமாக விடையளிக்கப்படின் , அதனை எதிர்மறையாக்கக் கூடிய ஏதேனும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமா அல்லது அக்கவனக் கடப்பாட்டை மீறலிற்கான சேதத்தை அல்லது எவருக்கு அக்கவனக்கடப்பாடு உரியதாக உள்ளதோ அவரது வகுப்பு அல்லது அக்கவனக்கடப்பாட்டின் பரப்பை குறைத்தல் அல்லது மட்டுப்படுத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அவசியமாக நோக்க வேண்டும்"

(அ) *Alcock v Chief Constable of Yorkshire (1991) 4 AllER 907* மற்றும் (ஆ) *Caparo Industries PLC v Dickman and Others (1990) 1 All ER 568* என்பனவற்றின் தீர்ப்புகளை பரீட்சித்து , Anns வழக்கின் இரு நிலை பரீட்சையுடன் எந்தளவு தூரம் இவை இணங்குகின்றன என ஆராய்க.

3. மகேஸ் என்பவன் ஆடைத்தொழிற்சாலை ஒன்றின் உரிமையாளன் ஆவான். கொவிட் 19 காரணமாக தொழிற்சாலைகளின் சகல பணியாட்களும் குறைந்தது இரண்டு (2) மீற்றர் தொலைவிலேனும் அமருகிறார்கள் என்றும் , மருத்துவ தரமுள்ள முகக் கவசங்களை அணிகிறார்கள் என்றும் உறுதிபடுத்துமாறு வேண்டப்பட்டுள்ளன. இவ் அறிவுறுத்தல்களை மகேஸ் பின்பற்றியுள்ளான். புதிய ஒமேகா பிறழ்வின் நிகழ்கால பரவல் காரணமாக கொவிட் 19 பணிக்குழு ஆனது , பணியாட்கள் நான்கு (4) மீற்றர்கள் இடைவெளியில் அமர வேண்டும் என்றும் , PPE உபகரணங்களை அணிய வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அவ்வாறு பின்பற்றினால் மகேஸிற்கு சகல பணியாளர்களையும் வேலைத்தளத்துள் இருத்த முடியாது. மேலும் PPE உபகரணமானது உற்பத்தி செலவை அதிகரிக்கும்.

தொழிற்சாலையின் சுகாதார பரிசோதகரான நிமல் என்பவன் , பணியாட்கள் மூன்று (3) மீற்றர்கள் இடைவெளியில் இருத்தல் போதுமானது என்றும் , PPE உபகரணங்களை பணியாட்களிற்கு அளித்தல் அவசியமானது அல்ல என்றும் மகேஸிற்கு அறிவுறுத்தினான். இலங்கையில் இரு ஒமேகா பிறழ்வு (Omega variant) தொற்றாளர்கள் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளார்கள் என்றும் , இவ்வைரஸ் தொற்று கட்டுபடுத்தக் கூடியது என்றும் மகேஸிற்கு கூறினான்.

மகேஸ், நிமலின் அறிவுரையை பின்பற்றினான். ஒரு மாத காலத்தின் பின்னர் 15 பணியாட்கள் ஒமேகா பிறழ்வு தொற்றுள்ளதாகக் கண்டறியப்பட்டனர். இத்தொற்றுப் பரவல் ஒமேகா பிறழ்வுடன் இனம்காணப்பட்ட நோயாளர்களுள் ஒருவரது மகளான கமானி எனும் பணியாளரிடம் கண்டறியப்பட்டது. கட்டாய தனிமைப்படுத்தல் காலத்திற்கு பின்னர் அவளிற்கு தொற்று இருப்பதாக உறுதிபடுத்தப்பட்டது.

(அ) நீரிழிவும் ஆஸ்துமாவும் உள்ள சாந்தி என்பவள் மிகக் கடுமையாக நோயுற்றதுடன், தனியார் வைத்தியசாலையில் சிகிக்கைக்காக ரூபா 1 மில்லியன் வைத்திய செலவு ஏற்பட்டது. மதம் சார்ந்த காரணங்களுக்காக சாந்திக்கு தடுப்பூசி ஏற்றுதல் மறுக்கப்பட்டது.

(ஆ) மாலினியின் வயது முதிர்ந்த தாய் அவளிடம் இருந்து வைரஸ் தொற்றுக்கு உள்ளானதுடன் மரணித்தாள். அவர் தடுப்பூசியைப் பெறுவதற்காக சில மாதகாலம் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. மாலினியின் தாயே அவளது இரு சிறு பிள்ளைகளை கவனித்து வந்தமையால், தற்போது மாலினிக்கு பிள்ளைகளை பராமரிக்கும் செலவு ஏற்பட்டுள்ளது.

(இ) சுமணா என்பவள் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டதுடன் , அங்கு சுவாசிக்க இயலாமல் கொவிட் காரணமாக பலர் இறப்பதை அவள் கண்ணுற்றாள். சுமணா நரம்பு மண்டலத்தாக்கம் ஒன்றால் பாதிப்படைந்ததுடன், அவள் குணமான பின்னர் வைத்தியசாலையின் மனநல பிரிவிற்கு அனுப்பப்பட்டாள்.

(ஈ) மகேஸின் தொழிற்சாலை மூன்று மாதகாலங்களிற்கு மூடப்பட்டதுடன் , அவன் பொருளாதார இழப்பை அடைந்தான்.

சாந்தி மாலினி சுமணா மற்றும் மகேஸ் ஆகியோர் நிவாரணம் கோர விரும்புகின்றனர். (அ) அவர்கள் யாரிற்கெதிராக வழக்கிட முடியும் (ஆ) எவ் அடிப்படைகளில் வழக்கிட முடியும் என ஆராய்க.

4. “விபத்தில் இருந்து அதிக சேய்மையானது எனக் கருதப்படும் சேதம் ஒன்றிற்கு சட்டம் ஆனது நட்டயீடு வழங்காது. இது நிகழ்வு சார் வினாவாக அன்றி சட்டம் சார் வினாவாக காணப்படுவதாலாகும். மீளப் பெறுதலின் மீது ஒரு மட்டுப்பாட்டை ஏற்படுத்தும் சட்டம் இது ஆகும்…”

**Harpwood, Principles of Tort Law , 3rd Edition, (1997) at pg 23**

பிரதிவாதி ஒருவரால் ஏற்படுத்தப்பட்டுள்ள சேதம் சேய்மையானதா , இல்லையா என்பதை தீர்மானிக்க நீதிமன்றங்கள் பயன்படுத்தும் சட்டக் கோட்பாடுகளை ஆராய்க. உமது விடையை தீர்ப்புச் சட்டங்களில் இருந்து பொருத்தமான உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக.

உமது விடையில் கூற்றில் அடிக்கோடிடப்பட்டுள்ள வாக்கியத்தின் மீது குறிப்பாக கவனம் செலுத்துக.

5. “14 (1) (அ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும் இனச் சுமூக வாழ்வு , மதச் சுமூக வாழ்வு என்பனவற்றின் நலன் கருதியோ அல்லது பாராளுமன்றச் சிறப்புரிமை , நீதிமன்ற அவமதிப்பு, மான நஷ்டம் அல்லது தவறு புரியத் தூண்டுதல் என்பன தொடர்பாகவோ சட்டத்தினால் விதந்துரைக்கப்பட்டவாறான அத்தகைய மட்டுப்பாடுகளிற்கு அமைந்தனவாதல் வேண்டும்”

**உறுப்புரை 15 (2) , இலங்கை அரசியலமைப்பு**

அவதூறுச் சட்டமானது பேச்சு சுதந்திரத்திற்கான உரிமையை முறையற்று கட்டுப்படுத்தவில்லை என்பதை உறுதிப்படுத்த நீதிமன்றுகள் எவ்வாறு முயற்சிக்கின்றன என ஆராய்க. உமது விடைக்கு ஆதாரமாக இலங்கை மற்றும் பிற நியாயாதிக்கங்களில் இருந்து தீர்ப்புச்சட்டங்களுடன் குறிப்பிடுக.

**பதிப்புரிமை பெற்றது**